**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------

**அ.வ.எண்.44/2020**

**2022ம்** வருடம் டிசம்பர் மாதம் **13ம்** நாள் வாதி தரப்பு சாட்சியாக **வா.சா.1** ன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர் :ராணி
க/பெ. :முருகன்
கிராமம் :
தாலுகா :
தேதி : 13.12.2022

ஜாதி :
தொழில் :வீட்டுக்குடித்தனம்
மதம் :
வயது :52/2022

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதியாவேன், வாதி தரப்பு முதலாவது சாட்சியாவேன். வழக்கிற்கு ஆதரவாக எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அந்த நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னது தான் அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். மேலும் 19.03.1999 தேதியிட்ட எனது பெயரில் உள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும். 20.10.2016 தேதியில் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட எனது பெயரில் உள்ள கூட்டுபட்டா கணிணி நகல் வா.சா.ஆ.2 ஆகவும், மின் கட்டண ரசீதுகள் 2 எண்ணிக்கை அசல் வா.சா.ஆ.3 ஆகவும். 23.12.2019 தேதியில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 15.03.2007 தேதியில் பிரதிவாதியின் தந்தை பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், தாவா சொத்தை உள்ளடக்கிய புகைப்படம் அசல் 2 எண்ணிக்கை வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்கிறேன். மேலும் தாவாப்படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

P JAISANKAR Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate
Athoor